| | |
|---|---|
| அனுப்புநர்<br>சு. ஜெகவீரபாண்டியன்,<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருநெல்வேலி. | பெறுநர்<br>அனைத்து செய்தி ஆசிரியர்கள்,<br>நாளிதழ் / தொலைக்காட்சி நிறுவனம்<br><br>திருநெல்வேலி |

**ந.க.எண். 281/செமதொ/செ/2016 , நாள்.05.12.2017.**

அய்யா,

பொருள் : இலவச பேருந்து பயண அட்டை– செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி – செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்கள் 2018ம் ஆண்டிற்கு இலவச பேருந்து பயண அட்டை புதுப்பித்து வழங்குதல் – நிறுவனத்தின் பரிந்துரை கடிதம் மற்றும் புகைப்படங்கள் அனுப்பி வைப்பது – தொடர்பாக

-----

திருநெல்வேலி மாவட்டத்தில் நாளிதழில் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணியாற்றி வரும் செய்தியாளர்கள் / புகைப்படக்காரர்கள் ஆகியோருக்கு 2017ம் ஆண்டிற்கு இலவ்வச பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதனை 2018ம் ஆண்டிற்கு புதுப்பித்து / புதிதாக வாங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்படி, தங்கள் நிறுவனத்தின் மூலம் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி, பரிந்துரை செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களால் செய்தியாளர் அங்கீகார அட்டை பெற்ற செய்தியாளர்கள் / புகைப்படக்காரர்கள் ஆகியோருக்கு இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.
2. மாவட்ட தலைநகரங்களில் பதிப்பு வெளிவரும் நாளிதழ்களுக்கு இரண்டு செய்தியாளர்கள், ஒரு புகைப்படக்காரருக்கும் இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.
3. ஊடகத் துறையில் முழுநேரம் உழைக்கும் பத்திரிக்கையாளர் சட்டத்தின்படி செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களாக பணிபுரிய வேண்டும்.
4. வெளியூர்களிலிருந்து வெளியிடப்படும் செய்தி நிறுவனங்களின் மாவட்ட செய்தியாளர் ஒருவருக்கும், புகைப்படக்காரர் ஒருவருக்கும் மட்டுமே இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.
5. இலவச பேருந்து பயண அட்டை கோரும் நாளிதழ், செய்தி நிறுவனங்கள் தங்களது வெளியீடுகள் மூலம்

i) இம்மாவட்டத்தில் எவ்வளவு பிரதிகள் நாளொன்றுக்கு விற்பனையாகிறது ?

ii) எவ்வளவு சந்தாதாரர்கள் உள்ளார்கள் ?

iii) பொதுமக்கள் வாங்கிப்படிக்கும் அளவிற்கு கடைகளில் கிடைக்கும் தன்மை ஆகியவை குறித்த தகவல்கள் அளிக்கப்பட வேண்டும்.

6. பணிபுரியும் நிறுவனத்திலிருந்து பணி நியமன ஆணை மற்றும் பரிந்துரைக் கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

7. குறைந்தபட்சம் மூன்றாண்டுகள் ஊடகத்துறையில், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிறுவனங்களில் தொடர்ச்சியாக அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (சான்றுகள் இணைக்கப்பட வேண்டும்)

8. மாவட்ட தலைநகரில் பணிபுரிபவர்களாக இருக்க வேண்டும்.

9. ஒருவரே பல்வேறு தொலைக்காட்சிகள் மற்றும் பத்திக்கை நிறுவனங்களில் பகுதிநேரமாக வேலை பார்ப்பவர்கள் என்றால் அவருக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்க இயலாது.

10. முழுநேர செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் தொலைக்காட்சி பிரிவினர் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்தாலும், ஏதாவது ஒரு நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் மட்டுமே இலவச பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில், அரசாணை விதிமுறைகளுக்குட்பட்டு, தங்களது நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கு 2018ம் ஆண்டிற்கான இலவச பேருந்து பயண அட்டை புதுப்பித்து வழங்கப்படவுள்ளது.

எனவே, தங்கள் நிறுவனத்தில் செய்தியாளர் புகைப்படக்காரர் மற்றும் ஒளிப்பதிவாளர் ஆகியோருக்கு 2018ம் ஆண்டிற்கான பயண அட்டை வழங்கிட தங்களின் பரிந்துரை கடிதத்துடன், அவர்களின் <u>அஞ்சல் வில்லை</u> **<u>(STAMP SIZE)</u>** அளவிலான <u>மூன்று</u> வண்ணப் புகைப்படங்களையும் **<u>20.12.2017</u>**க்குள் இணைத்து அனுப்பி வைத்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி

5.12.17